# பெரியாரைச் சீண்டும் ஆளுநருக்குப் பதிலடி ஆரியர் – திராவிடர் கற்பனையா?

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பிராமண சங்கத்தின் தலைவராக இப்போது "அவதாரம்" எடுத்து நேரடியாகப் பெரியாரைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார். ஆரியரைப் பற்றி தவறான கருத்தை பெரியார் பரப்பினாராம். ஆரியர் திராவிடர் வெவ்வேறு இனம் என்றும் ஆரியர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தனர் என்றும் கடந்த 60 ஆண்டுகளாக திராவிடச் சித்தாந்தம் பேசுவோர் கற்பனைக் கதையை உருவாக்கிப் பரப்புகிறார்.**

**ஆரியர் வந்தேறிகள் என்று ஈ.வெ.ராமசாமி கருத்துத் திணிப்பு செய்தார் என்றும் வாய்க் கொழுப்புடன் பேசி உள்ளார். இந்த உளறல்களை கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டது. பீகாரில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஆளுநரே உமக்கு வரலாறு ஏதாவது தெரியுமா?**

1. பார்ப்பனர்களே தங்களை ஆரியர்கள் என்று பெருமையுடன் அறிவித்துக் கொண்ட கதை தெரியுமா?

அவர்கள் ஆரிய சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டார்களே அது உமக்குத் தெரியுமா?

அதன் நிறுவனர் தயானந்த சரசுவதி ஆரியர்களாகிய வேதமும் சமஸ்கிருதமும் இரண்டு கண்கள் என்று அறிவித்தது தெரியுமா? ஆரியர்களாகிய நாம் வேதக் காலத்துக்கு திரும்ப வேண்டும் என அறைகூவல் விடுத்தது தெரியுமா?

2. 1875ல் பிரம்ம ஞான சபை (தியாசபிக்கல் சொசைட்டி) என்ற அமைப்பை கர்னல் ஒல்கட் என்ற வெளிநாட்டுக்காரர் தொடங்கியது தெரியுமா? அதில் பார்ப்பனர்கள் அணிவகுத்தது தெரியுமா? அந்த சபையில் இருந்த பிராமணர்கள் ஆரிய வர்த்தத்தை சேர்ந்தவர்கள் என்று அறிவித்துக் கொண்டது தெரியுமா?

ஆரியர் ஆதி சங்கரை தென்னாட்டில் பிறந்ததற்காக "திராவிட சிசு" என்று பார்ப்பனர்கள் பெருமை கொண்டாடினார்களே, அது எந்த அடிப்படையில்?

**நாங்கள் ஆரியர்கள் என்று கோல்வாக்கரே கூறுகிறார்!**

**ஆளுநரின் தாய் சபையான ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு கருத்தியலை உருவாக்கிய கோல்வாக்கரே நாங்கள் ஆரியர்கள் என்று அறிவித்துள்ளார். ஆரிய இட்லர் சொன்ன அதே கருத்தை, ஆரிய கோல்வாக்கரும் கூறுகிறார். நம்முடைய மக்களின் மூலாதாரம் எது என்பது சரித்திர மேதைகளுக்கே தெரியவில்லை. ஒரு வழியில் நாம் அநாதிகள்; துவக்கம் இல்லாதவர்கள்; பெயர் இல்லாமல் வாழ்ந்திருக்கிறோம். நாம் நல்லவர்கள். நாம் அறிவுத்திறம் கொண்டவர்கள். இயற்கையின் விதிகளை அறிந்தவர்கள் நாம் தான். ஆன்மாவின் விதிகளை அறிந்தவர்களும் நாம்தான். மனிதனுக்கு எவை எவை நன்மை பயக்குமோ, அவற்றை எல்லாம், மனித சமூகம் நன்மை பெறுவதற்காக வாழ்க்கைக்குக் கொண்டு வந்தது நாம்தான்! அப்போது நம்மைத்தவிர, மற்றவர்கள் எல்லாம் இரண்டு கால் பிராணிகளாகத்தான் அறிவற்றவர்களாகவே இருந்தனர். எனவே தனிமைப்படுத்தி நமக்குப் பெயர் எதையும் அவர்கள் சூட்டவில்லை. சில நேரங்களில் நமது மக்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட நாம் ஆரியர்கள் - அதாவது அறிவுத் திறம் மிக்கவர்கள் என்று அழைக்கப்பட்டோம். நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மிலேச்சர்கள். (ஆதாரம் Bunch of Thoughts).**

இது ஆரியதிராவிட பார்வை தானே!

**ஆரியர்கள் அந்நியர்கள் வந்தேறிகள் என்று வரலாற்றுத் ஆய்வாளர்கள் கூறிய கருத்தை இதோ பட்டியலிடுகிறோம்.**

"தென்னிந்தியாவில் வசித்து வந்த ஆரியரல்லாதார்களையே குரங்குகள் என்றும், அசுரர்கள் என்றும் இராமாயணக்கதையில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது." **(ரோமேஷ் சந்திர தத்தர் C .L.E.,I.C.S., எழுதிய 'புராதன இந்தியா' 52 ஆவது பக்கம்).**

"திராவிடர்கள் தங்கள்மீது படையெடுத்து வந்த ஆரியர்களோடு கடும்போர் புரிய வேண்டியிருந்தது". இந்த விஷயம் ரிக் வேதத்திலேயே




அநேக சுலோகங்களாக இருக்கின்றன. **(டாக்டர் ரோமேஷ் சந்திர மஜூம்தார் M.A., யின் 'பூர்வீக இந்திய சரித்திரமும் நாகரிகமும் 22 ஆவது பக்கம்).**

"ஆரியன் என்கிற பதம் இந்தியாவின் புராதனக் குடிமக்களிடமிருந்து

தங்களைப் பிரித்துக் காட்டுவதற்காக ஆரியர் ஏற்படுத்திக் கொண்ட பதம்".

"தஸ்யூக்கள் என்பது இந்தியப் புராதனக் குடிமக்களுக்கு அவர்கள் (ஆரியர்கள்) கொடுத்த பெயராகும்."

**(1922 ஆம் வருடம் பிரசுரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் 'பழைய இந்தியாவின் சரித்திரம்' புத்தகம்).**

ஆரியரல்லாதவர்களை ரிக் வேதத்தில் தாசர் (சூத்திரர்)கள் என்றும், தஸ்யூக்கள், அசுரர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கும் இருந்து கொண்டிருந்த அடிப்படையான பகைமையைப் பற்றி ரிக்வேதத்தில் பல இடங்களில் காணலாம். "இரு வகுப்பாருக்கும் இருந்த கலை வேற்றுமையும் அரசியல் வேற்றுமையுமே இந்தப் பகைக்குக் காரணமாகும்." **(டாக்டர் ராதாகுமுத முக்கர்ஜி எம்.ஏ, பி. எச்டி. எழுதிய, 'இந்து நாகரிகம்' புத்தகத்தில் 62 ஆவது பக்கம்).**

"தமிழர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென் கிழக்கிலும், இலங்கையின் சில பாகத்திலும் வசிக்கும் ஆரியரல்லாத திராவிட மக்கள் ஆவார்கள். தமிழ் என்பது மேற்படியாளர்களால் பேசப்படும் பாஷை" **- (சர் ஜேம்ஸ்மர்ரே எழுதிய இங்கிலீஷ் அகராதியின் பக்கம்).**

"ஆரியர்கள் தங்கள் மொழியை ஆரியரல்லாதாருக்குள் புகுத்த முயற்சித்து, முடியாமல் போனதால், ஆரியரல்லாதாருடைய பாஷைகளைக் கற்றுக் கொண்டு, அவர்களது நாகரிகத்தையும் பின்பற்ற வேண்டி வந்தன" **(பண்டர்காரின் கட்டுரைகள் வால்யூம் 3 பக்கம் 100).**

"தமிழர்கள், ஆரியர்களை வடவர், வடநாட்டார் என்று அழைத்தார்கள், ஏனெனில், ஆரியர்கள் வடக்கே இருந்து வந்தார்களானதால்" **-(டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார், எம்.ஏ பி. எச்.டி, அவர்கள் எழுதிய 'தென்னிந்தியாவும் 'இந்தியக் கலையும்' என்ற புத்தகத்தில் 3 ஆவது பக்கம்).**

'இராமாயணத்தில் தென்னிந்தியா (திராவிட தேசம்) தஸ்யூக்கள் என்ற ராட்சதர்களுக்குச் சொந்தமாக இருந்தது. இவர்கள் (தென் இந்தியர்கள்) வட இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களைப் போலவே நாகரிகம் அடைந்தவர்களாய் இருந்தார்கள்." **- (பி.டி.சீனிவாச அய்யங்கார் எழுதிய 'இந்திய சரித்திரம், முதல் பாகம்' புத்தகத்தில் 10ஆவது பக்கம்).**

ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளாகிய திராவிடர்களை, தங்களுடைய புத்தகங்களில் திராவிடர்கள்- தஸ்யூக்கள் என்றும், - தானவர்கள் என்றும், ராட்சதர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். "ஆரியக் கவிகள் திராவிடர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுகிறது. ஏனெனில், ஆரியர்கள் திராவிடர் நாட்டில் சிறுகச் சிறுக நுழைந்து, ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்."

**- (C.S. சீனிவாசாச்சாரி, M.A.,M.S., ராமசாமி அய்யங்கார் M.A., ஆகிய சரித்திரப் போதகர்கள் எழுதிய, 'இந்திய சரித்திரம், முதல் பாகம்' என்னும் (H.G.வெல்ஸ் எழுதிய உலகத்தின் சிறு சரித்திரம் புத்தகம் 105வது பக்கம்)**

"வட இந்தியாவில் இருந்த திராவிடக்கலை, நாகரிகம் முதலியவை யாவும்ஆரியர்களால் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், தென்னிந்தியாவில் அவ்விதம் நடக்கவில்லை." (தமிழ்ப் பேராசிரியர் K.N. சிவராஜபிள்ளை B.A., எழுதிய 'பண்டைத் தமிழர்களின்வரலாறு'என்னும் புத்தகம் 4 ஆம் பக்கம்). ஆரியரல்லாத இந்த நாட்டுப் பழங்குடிமக்கள் ஆரியர்களால் காடுகளுக்குத் துரத்தப்பட்டார்கள். இதுவும் போதாதென்று அவர்களை இராட்சதர்கள், அசுரர்கள் என்றும், ஆரியர்களும் ஆரியப்புரோகிதர்களும் நூல் எழுதி வைத்தார்கள்.

ஆரியரல்லாதார்களுக்கு இவர்கள் ஆதியில் இட்ட தஸ்யூக், ஆரிய எதிரி என்ற பெயர்கள் தான் நாளடைவில் பிசாசு, பூதம், ராட்சதன் என்ற பெயர்களாக மாறிவிட்டன." **- (சர் வில்லியம் வில்சன்ஹண்டர் K.C.S.I.,C.I.E., M.A., L.L.D. எழுதிய 'இந்திய மக்களின் சரித்திரம்' என்னும் நூலின் 41 ஆவது பக்கம்).**

இராமாயணமும், மகாபாரதமும் இந்தோ ஆரியர் காலத்தையும், அவர்களுடைய வெற்றிகளையும், உள்நாட்டுச் சண்டைகளையும் பற்றிக் கூறுவதாகும். இவைகள் உண்மையென்று நான் நம்பவேயில்லை. "பஞ்சதந்திரம்", "அராபியன் நைட்" முதலிய கற்பனைக் கதைகளைப் போன்றவை என்பதே என் கருத்து." **- (பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் எழுதியுள்ள "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" (Discove rey of India) பக்கம் 76-77).**

நன்றி
**புரட்சிப் பெரியார் முழக்கம் வார இதழ்**
7.3.2025

---

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# மணமேல்குடியில் முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

*புதுக்கோட்டை, மார்ச் 11-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மணமேல்குடி வடக்கு ஒன்றியம் மணமேல்குடியில் தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மணமேல்குடி வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் சக்தி ராமசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர் வீரப்பன் வரவேற்றார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, ஒன்றிய அவைத் தலைவர் உமாபதி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் மாலதி கணேசன், சக்திவேல், மாவட்ட பிரதிநிதிகள் கணேசன், குமரேசன், முருகன், மணமேல்குடி நகரச் செயலாளர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், கழக கொள்கை பரப்புச் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் சிறப்புரையாற்றி, 3000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கூட்டத்தில் அ.தி.மு.க., பா.ஜ.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளில் இருந்து விலகி ஏராளமானோர் கழகத்தில் அமைச்சர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கூட்டத்தில் தி.மு.க. தீர்மானக் குழு உறுப்பினர் சி. ராமநாதன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ரம்யா பாலு, நெசவாளர் அணி தலைவர் பழனியப்பன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணி ராஜன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் தி. முத்து, மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் விமலாதிராஜன், அறந்தாங்கி தொகுதி ஒருங்கிணைப்பாளர் செந்தில்வேலன், அறந்தாங்கி முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட அணிகளின் துணை ஒருங்கிணைப்பாளர்கள் முகமது நலீம், நாகராஜன், செந்தில் வேலன், சிராஜுதீன், லீமா ஜோதி, விஜயன், ரபிக் முகமது, சுந்தரம், துரைராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாரிமுத்து, துணை அமைப்பாளர் முகமது இம்தியாஸ், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் வினோத் குமார், ராஜாராமன், காளிமுத்து, கருப்பையா, சுப்பையா, பார்த்தசாரதி, பாலமுருகன், சபீனா நூர், சுதன், பிரபு ராமன், குமரவேல், செல்வராஜ், குமாரசாமி, ஒரு ஜெய்சங்கர், விக்னேஸ்வரன், பார்த்திபன், தீபன்ஆவுடையப்பன், குணசேகரன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு நகரக் கழகம் சார்பில் பழைய பேருந்து நிலையம் அருகே நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு தர்பூசணி, வெள்ளரி, நீர்மோர் உள்ளிட்டவற்றை நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.எஸ்.மூர்த்தி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர கழக செயலாளர் தா.கார்த்திகேயன், வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு, நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## ஈரோடு தெற்கு மாவட்ட

# இளைஞர் அணி துணை அமைப்பாளர் இல்ல மணவிழா வரவேற்பு!

## இன்று நடைபெறுகிறது!

*ஈரோடு, மார்ச் 11 -*

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.நித்தின், ஈரோடு மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் இரா.கஸ்தூரி இராமசாமி இல்ல திருமண வரவேற்பு விழா இன்று நடைபெறுகிறது.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் முதலமைச்சரும் கழக தலைவருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இரா.நித்தின் சகோதரியும், ஈரோடு மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் இரா.கஸ்தூரி இராமசாமி க.இராமசாமி ஆகியோரின் மகள் இரா.நந்திதா, துரை (எ) நா.தேவராஜ் சுமதி (எ) தே.நேசமணி ஆகியோரின் மகன் அஜீத் (எ) டாக்டர் சௌந்தர்பாபு ஆகியோர் திருமண வரவேற்பு விழா இன்று (11.3.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் 9 மணி வரை ஈரோடு பூந்துறை மெயின் ரோடு, முள்ளாம்பரப்பு ரீபதி மஹாலில் நடைபெற உள்ளது.

வரவேற்பு விழாவில் ஆன்றோர் சான்றோர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி பேரூர் வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.



ஈரோடு மத்திய மாவட்டம் பவானி நகரக் கழக முன்னாள் செயலாளர் ப.சீ.கிட்டு (எ) ப.சீ. கிருட்டிண சாமி அவர்களின் 24வது நினைவு நாளை முன்னிட்டு பவானி நகர கழக செயலாளர் ப.சீ.நாகராஜன் தலைமையில் ப.சீ.கிட்டு அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். நிகழ்வில் பவானி நகர மன்ற தலைவர் சிந்தூரி இளங்கோ உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பவானி நகரக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை! ப.முருகமணி வரவேற்புரை!

# மயிலாடுதுறை கிழக்கு - நல்லத்துக்குடியில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்!

## போடி.காமராஜ் சிறப்புரை! குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

*மயிலாடுதுறை, மார்ச் 11-*

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா பொது கூட்டம் நல்லத்துக்குடியில் நடைபெற்றது.

பொதுக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.முருகமணி வரவேற்றார். மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மயிலாடுதுறை வடக்கு என்.இளையபெருமாள், மயிலாடுதுறை மத்திய ஞான.இமையநாதன் மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றிய நிர்வாகிகள் சிவ. கோபாலகிருஷ்ணன், கே.ராஜேந்திரன், ஜி.அசோகன், அபிராமிவெங்கடேசன், சி.மதனகோபால், சௌ.இதயச்சந்திரன், பத்மாவதிசீனிவாசன், பி.சபரி ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் போடி. காமராஜ் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், துணைச் செயலாளர் கண்ணகி பன்னீர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், பி.எம்.அன்பழகன், பஞ்சு குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், ஏ.ஆர்.ராஜா, அமிர்தவிஜய குமார், எம்.அப்துல்மாலிக், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலளார்கள் எம்.சம்சுதீன், எஸ். கே.முத்துராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் நல்லத்துக்குடி, கிளை செயலாளர் ஜி.வைத்தியநாதன் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச.த.ராதா
### மார்ச் 11 (2017)



இளமை காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சோளிங்கர் பேரூரில் வட்டச் செயலாளராகவும், பேரூர் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் நகர கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**